# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசின் ஆசிரியர் தேர்வு வாரியத்தால், நடத்தப்படும் முதுகலை ஆசிரியர்கள்/உடற்கல்வி இயக்குநர் நிலை-1க்கான இணையவழித் தேர்வுகள் (CBT) 27.09.2019 முதல் 29.09.2019 வரை 3 நாட்கள் நடைபெற உள்ளது.

அரியலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களால், அரியலூர் மாவட்டத்திலிருந்து

முதுகலை ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர் நிலை-1 தேர்வு எழுத உள்ள தேர்வர்களுக்கு பயிற்சி தேர்வு **25.09.2019** அன்று காலை 10 மணி முதல் 4.30 மணி வரை கீழ்க்கண்ட அட்டவணையின்படி நடத்தப்பட உள்ளது.

இத்தேர்விற்கு வரும் தேர்வர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வழங்கப்பட்டுள்ள நுழைவுச்சீட்டு நகல் எடுத்து வரவேண்டும். நுழைவுச்சீட்டு நகல் எடுத்து வரும் தேர்வர்கள் மட்டுமே பயிற்சி தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**பயிற்சி தேர்வு மையம்** - RMSA அலுவலகம், அரியலூர். **தேர்வுகள் வசிப்பிட பகுதிகள்** - அரியலூர் அதை சுற்றியுள்ள கிராமப்புற தேர்வர்கள்.

**பயிற்சி தேர்வு மையம்** - அரசு மேல்நிலைப்பள்ளி, திருமானூர். **தேர்வுகள் வசிப்பிட பகுதிகள்** - திருமானூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியின் தேர்வர்கள்.

**பயிற்சி தேர்வு மையம்** - அரசு மேல்நிலைப்பள்ளி, செந்துறை. **தேர்வுகள் வசிப்பிட பகுதிகள்** - செந்துறை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியின் தேர்வர்கள்.

**பயிற்சி தேர்வு மையம்** - அரசு மேல்நிலைப்பள்ளி, ஆண்டிமடம் **தேர்வுகள் வசிப்பிட பகுதிகள்** - ஆண்டிமடம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியின் தேர்வர்கள்.

**பயிற்சி தேர்வு மையம்** - அரசு மேல்நிலைப்பள்ளி, ஜெயங்கொண்டம். **தேர்வுகள் வசிப்பிட பகுதிகள்** - ஜெயங்கொண்டம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியின் தேர்வர்கள்.